5(4)

**சுருக்கம்**

வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களை மேற்பார்வையிடவும் கள ஆய்வு செய்யவும் ஏதுவாக 2013–2014–ஆம் நிதியாண்டில் வட்டார அளவில் பணியாற்றும் வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கு 166 புதிய ஈப்புகள் வழங்குதல் – அனுமதி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை (வேநி6) துறை**

அரசாணை (நிலை) எண். 215

நாள் : 30.10.2013

படிக்க

1. அரசாணை (நிலை) எண்.145, வேளாண்மை (வேநி6) துறை, நாள் 10.09.2011.
2. வேளாண்மை இயக்குநர், சென்னை–5 அவர்கள் கடித எண்.VBD-4/59121/2010, நாள் 03.05.2013.

----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2011-2012-ம் நிதியாண்டில் வட்டார அளவில் பணியாற்றும் வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கு 213 ஈப்புகள் (மகிந்திரா பொலிரோ BS III) வாங்கவும், அதாவது ஏற்கனவே கழிவு செய்யப்பட்ட 34 ஈப்புகளுக்குப் பதிலாக புதிதாக 34 BS III Mahindra Bolero ஈப்புகள் வாங்குவதற்கும், கூடுதலாக 179 புதிய ஈப்புகள், மொத்தம் 213 BS III Mahindra Bolero ஈப்புகள் வாங்க தொடரா செலவினமாக (Non-Recurring Expenditure) ரூ.1387.21362 இலட்சமும், ஓட்டுநர் ஊதியம், எரிபொருள் செலவினம் ஆகியவற்றிற்காக ஆண்டொன்றுக்கு ரூ.241.75740 இலட்சமும் (தொடர் செலவினம் (Recurring Expenditure) ஆகமொத்தம் ரூ.1628.97102 இலட்சம் (ரூபாய் பதினாறு கோடியே இருபத்தி எட்டு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து நூற்றி இரண்டு மட்டும்) ஒப்பளிப்பு செய்தும், மீதமுள்ள 166 (379–213) ஈப்புகளைப் பொறுத்தமட்டில் அவ்வப்போது கழிவு

செய்யப்படும் வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனம் அரசு அனுமதியுடன் வாங்கவும் வேளாண்மை ஆணையருக்கு அனுமதி வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில் ஏற்கனவே வேளாண்மைத் துறையின் கீழ் இயங்கும் வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு புதியதாக 379 ஈப்புகள் கொள்முதல் செய்து வழங்கிட அனுமதி கோரப்பட்டதில் அரசாணை (நிலை) எண்.145, வேளாண்மைத் துறை, நாள் 10.09.2011–ன்படி முதற்கட்டமாக 213 புதிய ஈப்புகள் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டது என்றும், மீதமுள்ள 166 புதிய ஈப்புகள் கொள்முதல் செய்ய, பழைய வாகனங்களை கழிவு செய்தபின் அரசிடம் அனுமதி பெற்று கொள்முதல் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தற்போது மாவட்ட வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக ஈப்புகள் 166 எண்கள் இதுவரை கழிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவித்து கழிவு செய்யப்பட்ட 166 வாகனங்களுக்குப் பதிலாக 166 புதிய ஈப்புகள் வாங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

3. வேளாண்மை இயக்குநர் மேலும் தமது கடிதத்தில் வேளாண்மைத்துறையின் செயல்பாடுகளை விரைந்து முடித்திடவும், வேளாண் பெருமக்களுக்கு அவ்வப்போது வேளாண்மை பற்றிய செய்திகளை உடனுக்குடன் வழங்கிடவும் வாகனம் இன்றியமையாத ஒன்றாகிறது என்றும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கை எண்.5, அறிவிப்புகள் 2013–14ல் பழுது நீக்கம் செய்ய இயலாத பழைய வாகனங்களுக்குப் பதிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வேளாண்மை துறைக்காக 166 புதிய வாகனங்கள் வாங்கப்படும் என அறிவித்துள்ளார்கள் என்றும், எனவே, அரசாணை (நிலை) எண்.145, வேளாண்மைத் துறை, நாள் 10.09.2011–ல் அளித்துள்ள அனுமதி / அதிகாரத்தின்படி வேளாண்மைத்துறை வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட வேண்டிய எஞ்சிய புதிய ஈப்புகளான (379–213=166) 166 எண்களை ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனமான "மகேந்திரா & மகேந்திரா" நிறுவனத்திடம் வாகனம் ஒன்றின் விலை ரூ.5,44,873/–, உதிரி பாகங்கள் ரூ.25,000/– மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.3,000/– ஆக மொத்தம் ரூ.5,72,873/– விலையில் 166 புதிய ஈப்புகள் கொள்முதல் செய்து வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு வழங்க நிர்வாக அனுமதியும் மற்றும் தேவையான நிதி ரூ.10,37,82,038/–யும் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கும்படி அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்படி செயற்குறிப்பின் அடிப்படையில் புதிதாக வாங்கப்படவுள்ள 166 BS III Mahindra Bolero ஈப்புகளுக்கான தொடரும் மற்றும் தொடரா செலவினம் பின்வருமாறு அமையும் என கணக்கிடப்பட்டுள்ளது :–

| தொடரா செலவினம் | (ரூபாயில்) |
|---|---|
| ஈப்பின் விலை ரூ.5,44,873 x 166 | 9,04,48,918/– |
| உதிரி பாகங்கள் ரூ.24,800 x 166 | 41,16,800/– |
| புதிய வாகனம் என்பதால் முதல் மூன்று கட்டாய (சர்வீஸ்) பராமரிப்பு செய்ய வேண்டும். எனவே பராமரிப்புத் தொகை ரூ.18000 x 166 வாகனங்களுக்கு | 29,88,000/– |
| பதிவுக் கட்டணம் ரூ.3000 Per Vehicle x 166 | 4,98,000/– |
| **மொத்தம்** | **9,80,51,718/–** |
| **தொடரும் செலவினம்** | |
| எரிபொருள் செலவினம் (1 வருடத்திற்கு) 166 x 55 x 12 x 52 | 56,97,120/– |
| அ.ஆ.எண் MS. No. 365 நாள் 20.09.10–ன் படி ஒரு மாதத்திற்கு ஒரு ஈப்பிற்கு எரிபொருள் தகுதி | 55 லிட்டர் |
| 166 ஈப்புகளுக்கு 166 x 55 x 12 | 109560 லிட்டர் |
| 1 வருடத்திற்கு எரிபொருள் ரூ.52 x 109560 லிட்டர் | 56,97,120/– |

**சுருக்கம்**

| | |
|---|---|
| தொடரா செலவினம் 166 ஈப்புகளுக்கு | 9,80,51,718/– |
| தொடரும் செலவினம் | 56,97,120/– |
| **மொத்தம்** | **10,37,48,838/–** |

5. மேற்காணும் சூழ்நிலையில், வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, கழிவு செய்யப்பட்ட 166 பழைய வாகனங்களுக்குப் பதிலாக 2013–2014–ம் நிதியாண்டில் 166 புதிய ஈப்புகள் கொள்முதல் செய்யவும், வட்டார அளவில் பணியாற்றும் வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு வழங்கவும் வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனமான “மகேந்திரா & மகேந்திரா” நிறுவனத்திடம் இருந்து மேலே

பத்தி 4—ல் குறிப்பிட்டுள்ள செலவின விவரப்படி 166 Mahindra Bolero LX 2WD BS III புதிய ஈப்புகள் வாங்க தொடரா செலவினமாக ரூ.9,80,51,718/— (ரூபாய் ஒன்பது கோடியே எண்பது இலட்சத்து ஐம்பத்தொராயிரத்து எழுநூற்று பதினெட்டு மட்டும்) தொடரும் செலவினமாக ரூ.23,73,800/— (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து எழுத்து மூன்றாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆக மொத்தம் ரூ.10,04,25,518/— ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. 166 புதிய வாகனங்கள் வாங்குவதற்காக மேலே பத்தி 5—ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை "புதிய பணித் திட்டத்தின்" கீழ் (New Service Schemes) மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்படி தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :—

"2401—00— பயிர் வளர்ப்பு — 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் — II மாநிலத் திட்டம் — JA — வட்டார மாவட்ட பணியாளரமைப்பினை வலுப்படுத்துதல்"

21—மோட்டார் வண்டிகள் – 01 வாங்குதல் ரூ. 9,80,51,718/—
(2401 –00 – 001 –JA 2115)

45 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ. 23,73,800/—
(2401 – 00 – 001 – JA 4506)

7. மேலே பத்தி 5—ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை "புதுப்பணித் திட்டமாக" கருதப்பட வேண்டும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் விரைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி செலவினத்தை இம்மாநிலத்தின் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். இந்த அரசாணையின் நகலுடன் குறிப்பிட்ட படிவத்தில் வேளாண்மை துறை இயக்குநரிடமிருந்து விண்ணப்பம் பெற்றபின் இதுகுறித்து நிதி (BG-I) துறையால் தனியாக நிதி ஒப்பளிப்பு செய்யப்படும். மேலும் இச்செலவினத்தை துணை மதிப்பீடு 2013-2014ல் சேர்ப்பதற்கு ஏதுவாக தேவையான விபரக் குறிப்பினை உரிய நேரத்தில் தவறாது நேரடியாக நிதி (BG-I) துறைக்கு அனுப்புமாறு வேளாண்மைத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை உள் (போக்குவரத்து) துறையின் அ.சா.எண் 33924/Tr.IV/2013-1, நாள்.17.05.2013 மற்றும் நிதித்துறையின் அ.சா.எண். 59575/வேளாண்மை/2013, நாள். 28.10.2013-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1792 (ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்றிரண்டு)

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**சந்தீப் சக்சேனா**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**<u>பெறுநர்</u>**

வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை-42.
முதன்மை மாநில தலைமை கணக்காயர் (G&SSA), சென்னை-18.
முதன்மை மாநில தலைமை கணக்காயர் (E&RSA), சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (Resident Audit) சென்னை-9.

**<u>நகல்</u>**

பொது (மோட்டார் வாகனம்) துறை, சென்னை-9.
போக்குவரத்துத் துறை, சென்னை-9.
உள்துறை, சென்னை-9.
பொது (SC) துறை, சென்னை-9.
நிதி (வேளாண்மை / வ.செ.பொ. I மற்றும் II) துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை-9.
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், வேளாண்மைத் துறை, சென்னை-9.
வேளாண்மை (அநமு.3) துறை, சென்னை-9. (2 நகல்கள்)

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பிரிவு அலுவலர்